கௌதம் பதிப்பகம்
எண் 2, சத்தியவதி நகர் முதல் தெரு, பாடி, சென்னை - 600 050.
தொலைபேசி : +91-94440-86888, 98947-62888, 90422-76544, 96888-29900
மின்னஞ்சல் : admin@gowthampathippagam.com Website : www.gowthampathippagam.com

## திருமதி ராஜம் கிருஷ்ணன் படைப்புகள்

# வேருக்கு நீர்

## 24

யமுனா முகத்தில் கையை வைத்துக் கொண்டு நெடு நேரமாக உட்கார்ந்து இருக்கிறாள். நிழல்கள் நீண்டு கண்களுக்குத் தெரியாமல் இருளோடு ஒன்றும்போது விளக்கைக் கூடப் போட மறந்த நிலையில் உள்ளக் குழப்பத்தில் கலங்குகிறாள்.

ஒரு வழியும் தட்டுப்படவில்லை. ஒரு தோல்வியை மறைக்க இன்னொரு தோல்விக்குள் புகுந்து கொண்டாள். அதுவும் தோல் காய்ந்து கழன்றபின் இன்னொன்று... இன்னொன்று...

வெளிமுற்றத்தில் சம்பா நிறைய நீரைத் தெளித்திருக்கிறாள். வெம்மை அடங்கும் அந்த நேரத்தில் சில்லென்று குளிர் இழையாய்க் காற்று மெல்ல வந்து மேனியில் படுகிறது. நீர் மண்ணிலே படிவதனால் ஆவியடங்கிக் குளிரும் மணம்.

பரிசுத்தம் என்பதற்கு ஒரு மணமுண்டானால் இது தானோ அது!

"சம்பா! குழந்தைகள் எங்கே?"

"மாந்தோப்பில் பஜனை, சத்சங்க சாதுக்கள் உற்சவம் நடத்துகிறார்கள். சுவாமிஜி வந்திருக்கிறார். நீங்களும் வருகிறீங்களா, மாஜி?"

"யார் சுவாமிஜி!"

"ஆனந்தானந்த சுவாமிஜி! மாந்தோப்பில் வருஷா வருஷம் நடத்துவார்கள். தேவேந்திர பாபுஜி, மாதாஜி எல்லோரும் வருவார்கள். நீங்களும் போயிருப்பீர்களோன்னு நினைச்சேன் மாஜி!"

"அப்படியா! தெரியாதே எனக்கு? அதுல் என்னிடம் சொல்லவில்லையே..."

"விடிய விடிய அகண்ட பஜனை..."

யமுனாவுக்குக் கதவைப் பூட்டிக் கொண்டு போகலாம் என்று தோன்றுகிறது. துரை வீடு திரும்ப நேரமாகும். மனதும் அமைதியில் அடங்கக் கூடும்.

நிலவு வெள்ளத் தண்கதிர்களால் உலகைத் தழுவ வருகிறது.

சம்பாவுடன் அவள் புழுதியும் குப்பையும் பரவும் தெருக்களையும், சந்துக்களையும் தாண்டி நடக்கிறாள். ஏழை வாழக் குடைபிடித்துக் கொண்டு நிற்கும் மாந்தோப்பில் நிலவு புகுந்து வந்து நிலத்தில் கோலமிடுகிறது! குட்டை குட்டையாக, குலுங்கக் குலுங்க அணிபணிகள் பூண்டு கைகளை ஒருவருக்கொருவராய்ப் பற்றிக் கொண்டு ஆடிப்பாட மகிழ்ந்து நிற்கும் மங்கையரைப் போல் ஒன்றுக்கொன்று தொடர்பாக நிற்கும் மாமரங்கள்.

"மாந்தோப்புகள் இந்த ஊருக்கே அழகு; இல்லையா சம்பா?"

"மாஜி இன்றுதான் இங்கே இத்தனை பங்களாக்கள். இதெல்லாம் இல்லாத போது முழுசுமே மாந்தோப்புக்கள் தான். நான் முன்னே

இந்த ஊருக்குப் பிழைக்க வந்த போது இங்கெல்லாம் வீடே கிடையாது" என்று கூறுகிறாள் சம்பா.

மாந்தோப்புக் குடிசைகளின் முன் நிலவில் ஓடிப் பிடித்து விளையாடும் குழந்தைகள் எல்லோரும் பஜனைக்குப் போய் விட்டார்கள் போலும்! நீண்டு விரிந்த மாந்தோப்பின் இடையிடையே கங்கைக் கரையை நோக்கி நீண்டுள்ள தெருக்களில் பெரிய பெரிய பங்களாக்கள் குறுக்கிடுகின்றன. அவற்றில் பெரும்பாலும் அரசின் அலுவலகக் கட்டிடங்கள். பெரிய பெரிய பலகைகளை முகப்பில் மாட்டிக் கொண்டு 'சௌக்கிதார்'கள் மட்டுமே காவல் காத்து நிற்க, களையிழந்து நிற்கின்றன. ஆங்காங்கு நிற்கும் ஜீப் வண்டிகள் வேறு, வட்டார வளர்ச்சி, விவசாயம் என்றெல்லாம் வளர்ச்சியைப் பற்றிச் சொல்கின்றன.

ஒரு தெருவைக் கடந்ததும், பஜனையின் பெரிய தாள ஒலிகளும், கீத ஒலிகளும் செவிகளில் விழுகின்றன.

தோப்பில் விளக்கு வெளிச்சமும் கூடாரங்களும் தெரிகின்றன. காவி உடையணிந்த சாதுக்கள், ஆடவர் பெண்டிர், குழந்தைகள்...

ஒருபுறம் அடுப்பில் கோதுமை மா நைந்த ஈரத்துடன் தீயில் பதமாக முறுகும் வாசனை பசித்தீயைக் கிளறுவதாக இருக்கிறது. பெரிய அலுமினிய வட்டைகளில் கிழங்கு கொதிக்கிறது.

அவர்கள் தாழ்ந்த மரக்கிளைகளுக்குத் தலை குனிந்து, பஜனைத் தலத்தை நெருங்குகையில், அவள் தலைக்கு மேல் ஓர் கிளை சலசலக்கிறது. யமுனா சட்டென்று நெஞ்சுத் துணுக்குற நிமிர்ந்து திரும்பிப் பார்க்கிறாள். இடையனைப் போன்று தலைக்கட்டுடன் ஒரு முகம் - நிலவொளியில் சிரிக்கும் முகம்.

சொப்பனமோ? அரைத் தூக்க மயக்கக் காட்சியோ?

மின்னல் போன்ற அதிர்ச்சி யமுனாவின் உள்ளத்தில் பாய்கிறது.

"சம்பா!..." தன் குரல் அவளுக்கே புதுமையாக இருக்கிறது.

"கொஞ்சம் நில்; முன்னால் ஓடறியே?"

மீண்டும் மீண்டும் மரத்தைத் திரும்பி நிமிர்ந்து பார்க்கையில் முகத்தில் விவரிக்க இயலாத பீதி படருகிறது.

இல்லை... வெறும் பொய்த் தோற்றம், சுதீர் இங்கு எதற்கு வருகிறான்; சுதீரின் முகமாகவே தோன்றுவது வெறும் பிரமை...

"என்ன மாஜி, அங்கே?"

"மாமரக் கிளையில் யாரோ உட்கார்ந்திருந்தாப் போல் இருந்தது சம்பா..."

"ராவேளை. காவல்காரனில்லைன்னு போக்கிரிப் பயல்கள் பழம் திருட வந்திருக்கும்..."

"ராம், ராம், சீதாராம்... ஜேஜே சீதாராம்..." என்ற ஒலிகள் செவிகளை நிறைக்கின்றன.

காவி அங்கியும் காவித் தலைக்கட்டும் அணிந்த சாதுக்கள், 'ஓம்' என்ற ஒளிப் பிரபை.

ஆர்மோனியம், தபேலா, ஜால்ராக்கள் -

நிலவொளியில் துயரம் என்பதையே அறியாத சின்னஞ்சிறு குழந்தைகள் துள்ளிக் குதித்துத் தாளமிடுகின்றனர்.

பிரசாதம் கிடைக்கப் போகிறதே!

சம்பா முன் நடந்து தலைத் துணியை இழுத்துவிட்டுக் கொண்டு நிலத்தில் நெற்றி தோய சாதுக்களுக்கு முன் பணிந்தெழுகின்றாள்.

அங்கே கூடியிருக்கும் பெண்களில் பெரும்பான்மையினரும் அவளைப் போன்றவர்களே.

கள்ளமற்ற அறியாமையில் அழுந்திய தாய்மார்கள் மூட நம்பிக்கைகளுக்கும் தூய நெறிகளுக்கும் வித்தியாசம் தெரியாமல் பற்றிக் கொள்ளும் பேதையர். ஆண் எங்கிருந்தோ மாசாமாசம் பத்தோ பதினைந்தோ அனுப்புவதை வைத்துக் கொண்டு வாழ்க்கையோடும் குடும்ப பந்தங்களோடும் போராடி மீளத் தெம்பில்லாமல் அழுந்திப் போகிறவர்கள். கங்கைக்கரைச் செங்கற் சூளைகளில் நாளெல்லாம் மண்ணறுக்கும் கூலிக்காரரர்கள், ரிக்ஷா இழுப்பவர்கள், மூட்டை தூக்குபவர்கள் எல்லோரும் அங்கே குழுமியிருக்கின்றனர். அலுவலகங்களில் புழுதி படியாமல் இடை நிலைகளில் வேலை செய்பவர்களும் இருக்கின்றனர். சிலர் கண்களை மூடிக் கைகூப்புகின்றனர். சிலர் உரத்துத் தாளம் போட்டுக் கோஷமிடுகின்றனர்.

பாரத சமுதாயத்தை மாய்த்து விடாமல் வைத்திருக்கும் கண்ணுக்குத் தெரியாத ஊற்றுக் கண்கள், இந்த அறியாமையிலும் இறை நம்பிக்கையிலும் தெளிவாகின்றன. இங்கே மாந்தோப்பு வடக்கே கங்கைக் கரைச் சாலை வரையிலும் பரந்திருக்கிறது. கிழக்கே ஒரு தெரு; பெரிய பெரிய மாளிகைகள் அமைந்த தெரு.

தூரத்தில் தெரியும் மாளிகை ஒன்றின் மேல் மாடி முகப்பில், தீபாலங்காரம் தெரிகிறது.

திருமண வைபவமோ? விருந்துக் களியாட்டமோ? பிறந்த நாளோ? பெயரிடு விழாவோ?

தெருவை அடைத்துக் கொண்டு கார்கள் நிறைந்திருக்கின்றன.

இங்கே தோப்பிலும் கொண்டாட்டந்தான்; அங்கே மாளிகையிலும் கொண்டாட்டந்தான்.

இங்கு ஆன்மிகத்தைக் குறியாகக் கொண்ட பக்தியும், கவடற்ற வறுமையும் இரக்கமும் பரிவும் அங்கம் வகிக்கின்றன.

அங்கே ஆடம்பரமும் உடலின்ப நோக்கமுமே அங்கம் வகிக்கின்றன.

அந்த மாடி, இங்கே 'தோப்புக்கு வந்து விட்டால்...'

பஜனை முடிந்த பின் கிடைக்க இருக்கும் பிரசாதம் மட்டுமே நோக்கமானாலும், குற்றமற்ற இளம் உள்ளங்களில் சிறுமை உணர்வு அழுந்தாத ஒரு மகிழ்ச்சி குலவும் சூழல்.

தோப்புகளையே அழித்து மாடி வீடுகளை எழுப்பியதாகச் சம்பா சொன்னாள். தோப்புகள் அழிய அழிய, தோப்புகளில் முடங்கியிருந்த குடிசைகள் அழிய வேண்டும்.

குடிசைகள்!... குடிசைகள்!... குடிசைகள்!...

பர்ண சாலைகளைப் போல் துப்புரவும் எளிமையும் அழகும் காற்றோட்டமும் வாய்ந்த ஆசிரமக் குடில்களா நினைவுக்கு வருகின்றன?

கோயமுத்தூர் சந்திப்பு நெருக்கடியிலிருந்து வங்கப் பெருநகரில் பஸ்திகள் வரை எத்தனை அல்ங்கோலமான காட்சிகள், துருப்பிடித்த தகரங்கள், சரக்கு ஒட்டுக்கள்; பெரிய மண்டிகளில் கிடங்குகளில் வேண்டாம் என்று குப்பையில் எறியப் பெற்ற பிளாஸ்டிக் துண்டுகள் - இவைகளின் பொருந்தாக் கூட்டுகள். இந்தக் கலவைக் குடிசைகளைப் போலவே மக்களும். இங்கும் சாதி மதம் குலம் எல்லாம் எடுபட்டுப் போகின்றன. உதவாதவை என்று ஒதுக்கப் பெற்று துண்டுகளைப் போல் - பொருளாதார வசதிகள் பெற்ற மாளிகைகளுள் நுழையவும் இல்லாமல் ஒதுங்கியவர்கள். உயிரும் துடிப்பும் ஒழுங்கின்றி ஏறியும் இறங்கியும் நகரின் அழகுகளைப் புற்றுநோய் வளர்ச்சிக்கு ஆளாக்கி விட்டிருக்கும் குடிசைகள். இந்த நலிந்த சமுதாயப் பகுதியை இன்றைய அரசியல் மன்னர்கள், அங்கே மாளிகையில் விழாக் கொண்டாடக் கூடிய மன்னர்கள், தங்கள் மாடிகளில் கேளிக்கைகள் நடத்திக் கொண்டே இருக்க வேண்டுமானால், இங்கே குடிசைகள் உயிர்த்து நெளிய வேண்டும். ஏனெனில் ஜனநாயக அரசியல் மன்னர்களுக்கு வேண்டிய வாக்குரிமைச் சுரங்கங்கள் அவை. அவை அழியவிடக் கூடாது.

"சம்பா! அதோ, அந்தப் பங்களாவில் என்ன விசேஷம்னு தெரியுமா உனக்கு?"

"ஹா...ஞ்ஜி, பெரிய எம்.எல்.ஏ. பாபு புது வீடு கட்டி கிரகப் பிரவேசம் செய்கிறார் மாஜி. ராஜேந்திர நகரில் பெரிய பங்களா இருக்கு. பெரிய தாதா மாஜி. முன்ன மழை வெள்ளம் வந்து எங்க கிராமத்தில் குடிசையெல்லாம் அடிச்சிட்டுப் போன போது, இவர் யானை மேல் வந்து எங்களுக்கெல்லாம் துணி, ரொட்டி எல்லாம் கொடுத்தார். நாங்க எப்பவும் அவருக்குத்தான் ஓட்டுப் போடுவது..."

"ஓ...? இங்கு வெள்ளம் வருமா?"

"ஹா...ஞ்ஜி, இங்கும் கங்காஜி பெருகி ரோட்டோரம் வந்து கால்வாய் நிரம்பி வழிவாள். குளம் குட்டை, இந்தத் தோப்பெல்லாம் நிரம்பிப் போகும். போன மூணாம் வருஷம் கூட இந்தக் கருணை மகான் தான் யானை மேல் வந்து வீடிழந்து போன எங்களுக்கெல்லாம் ஆறுதல் சொன்னார்."

"யானை மேல் வருவானேன்?"

"ஹா மாஜி, கிராமத்திலெல்லாம் போக வண்டி மோட்டார் பாதை ஏது? தடங்களெல்லாம் முழுகிய பின் யானை தான் போகும். யானை எல்லாம் யாராலே வைத்துக் கொள்ள முடியும்? ராஜாதிராஜ குடும்பத்தில் பிறந்த இவர்களைப் போன்ற பணக்காரர்களாலேதான் முடியும். அப்படி யானை மேல் வந்து அவர் எங்களைப் பார்த்த போது, ஆரத்திக்குக் கூட வழியில்லாம புடவை, மாவு, பால் பொடி எல்லாம் கொடுத்தார்..." என்றெல்லாம் சம்பா விவரிக்கிறாள்.

யானை மேல் வந்து பார்ப்பதை விட, சாலைகளைப் போட்டிருக்கலாம்! வெள்ளம் பாதிக்காத இருப்பிடங்களைக் கட்டியிருக்கலாம் என்று சொல்லும் எழுச்சி இந்த மக்களிடம் இல்லையே!

பெரிய பெரிய வீடுகளைக் கட்டி அரசினர் அலுவலகங்களுக்கு வாடகைக்கு விடுவதை விட, இவ்வளவு கார்களில் வந்திறங்கும் செல்வமும் செல்வாக்கும் உடையவர்களுக்கு ஆடம்பர விருந்துகள் கொடுப்பதை விட, துப்புரவாகச் சிறு இல்லங்கள் அமைத்துத் தந்தால் இன்னொரு முறை வெள்ளம் வரும்போது யானைமீது வந்து மக்களிடம் பேரன்பைப் பொழிந்து நன்றியுணர்வைப் பெற வாய்ப்பில்லாமல் போகுமே?

மீண்டும் மீண்டும் அரசு மாற, தேர்தல் நடைபெற, ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் பட்டினி கிடக்கும் மக்களுக்கு அளிக்க

அப்பத்துண்டாய் 'சோஷலிசம்' என்ற வாய்ப்பு இருக்க வேண்டுமே? உணவு, உறையுள் என்ற தேவைகள் அழிந்து விட்டால் பிறகு இந்த வாய்ப்பு ஏது?

செவிகளில் விழும் பஜனையை மறந்து அவள் சாலைக்கப்பாலுள்ள தீபாலங்கார மாடியில் கண்களைப் பதித்துக் கொண்டிருக்கிறாள்.

டமார்...!

செவிகள் அடைய ஓர் ஓசை, நிலமே அதிர்ந்தாற் போல் ஒரு குலுக்கல். தீபாலங்கார மாடியே புகைப்படத் தேனீக்கூடாய்த் தீ சூழல் கலங்கிப் போகிறது.

"என்ன...? என்ன...?"

பஜனை ஒலி நிற்கிறது. கூட்டம் குழம்பி யாரோ அடிக்க வந்தாற்போல் ஓடத் தலைப்படுகிறது. சிலர் சாலைப்பக்கம் மருண்டு ஓடுகின்றனர். சிலர் தோப்பின் மறுபுறம் ஓடி வருகின்றனர். போலீஸ்காரனின் ஊதுகுழல் ஒலிக்கிறது. தொடர்ந்து சாதுகளின் குழலோசைகள்.

"என்ன... என்ன... மாஜி?..."

"ஓடுங்கள்; குண்டு... குண்டு... வீசிட்டாங்க..."

"யாரு...?"

சாது ஒருவர் "அமைதியாயிருங்கள்... அமைதி... அமைதி...!" என்று கத்துகிறார். "மக்களே! ஓடாதீர்கள்! பிரசாதம் வாங்கிக் கொள்ளுங்கள்...!" என்று குழந்தைகளைத் தடுத்து நிறுத்துகிறார்.

"மாதாஜி வாருங்கள், ஓடாதீர்கள்..." என்று பெரிய வட்டைகளில் ரவையும் சர்க்கரையும் கொட்டிச் செய்த பிரசாதத்தை உருட்டி உருட்டிக் கைகளில் மற்றொரு சாது வைக்கிறார். இன்னொரு காவி உடைக்காரர் தர்பூஸ் துண்டுகளை அவசர அவசரமாக வழங்குகிறார்.

தாய்மார் குழந்தைகளுக்காக கூவிக் கொண்டு விரைகின்றனர். சம்பாவும் தன் மக்களைத் தேடி இழுத்துக் கொண்டு திரும்புகிறாள்.

"மாஜி வாங்க," யமுனா கனவில் நடப்பவலை போல் சம்பாவின் பின்னேயே நடக்கிறாள்.

மாமரத்தின் மீதிருந்து நிலவொளியில் தென்பட்ட முகம் உணர்வுகளைக் கக்கலும் கரைசலுமாகக் கலக்கிக் கொண்டு வருகிறது. "ஆண்டவனே! ஆண்டவனே!..." என்று உள்ளம் பற்றிக் கொள்கிறது.

எப்படியோ அவள் வீடு வந்து சேருகிறாள். சம்பாவும் அவளுடன் வருகிறாள்.

யமுனாவுக்குக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே செல்லவே உடல் நடுங்குகிறது.

"மாஜி, சாப் வீடு திரும்பும் வரையில் நான் துணையிருக்கிறேன்..." என்று குழந்தைகளுடன் நிற்கிறாள்.

முன்னறையில் சோபா, நாற்காலி அலங்காரங்கள், கடியாரம், சாம்பல் கிண்ணம்...

அந்த முகம் தோன்றிச் சிரிப்பது போலிருக்கிறது; தலையில் முண்டாசு, முகத்தில் சிரிப்பு.

உல்லாசமான இடைப்பையன் வேடம் பூண்டாற் போலிருந்தது.

இடைப்பையன் கையில் குழல் வைத்திருப்பான். மாந்தோப்பு நிழலில் ஊனை உருக்கும் இசை வடிப்பான். எறிகுண்டு... எறிகுண்டு வீசப் பதுங்கி இருப்பானோ?

இன்னதென்று விள்ள இயலாத ஒரு சங்கடம் மனதில்.

முகத்தில் கையை வைத்துக் கொண்டு சூனியத்தைப் பார்க்கிறாள். அம்மாவன் சென்றிருக்கலாமோ?

"சாப் ஊரிலில்லையா மாஜி?"

"ஊரில்தானிருக்கிறார். வெளியே போயிருக்கிறார். எனக்கு என்னமோ கவலையாக இருக்கிறது. இங்கும் குண்டு வெடிக்கிறதே?"

"அதான்... முன்ன ஒரு நாள் புன்புன் பாலத்தில் ஒரு குண்டு வெடிச்சு பையன் ஒருவன் செத்துப் போனான். முஸல்மான்கள் தான் இப்படிப் பண்ணுகிறார்களா மாஜி?"

"முஸல்மான்களா!"

யமுனா திகைக்கிறாள். "சே சே, அவங்கல்லாம் இல்ல. இது யாரோ?"

"மாஜி, கல்கத்தாவில் இப்படித்தான் நடக்கிறதாம். புரட்சி வர, எனக்கு ரெண்டு மாசமாப் பணம் வரலே. இந்தக் குழந்தைகளின் தகப்பன் அப்படியெல்லாம் தாறுமாறாகப் போகிறவர் அல்ல. நான் தினமும் காலையில் கங்கையில் ஸ்நானம் செய்து பிரார்த்தனை செய்கிறேன்..." என்றுரைக்கிறாள் சம்பா.

ஓடும் கங்கையன்னையிடம் தம் ஊமைத் துயரத்தைத் தூதுவிடும் அவளைப் பார்க்கையிலேயே கண்கள் கசிகின்றன.

அழுக்கு வெள்ளைச் சேலை. சேலை முக்காட்டின் ஒரு புறம் எண்ணெய்ப் பளபளப்பில்லாத கருங்கூந்தல் அவிழ்ந்து தொங்குகிறது. வகிற்றில் நேர்க்கோடாய்க் குங்குமம்.

யமுனாவுக்கு அவளைப் பார்த்தால் சாரதாமணி அன்னையை நினைக்கத் தோன்றுகிறது.

அவள், சின்னஞ்சிறு இருள் மண்டிய தனி உலகில் ஏழு மக்களுடன் சுழலுகிறாள்.

யமுனாவின் உலகோ எல்லைகளற்ற பெருவெளி, ஆனால் அது சூனியம் போலிருக்கிறது; பாலையாக இருக்கிறது; குரல் கொடுத்தால் எதிரொலி வராத வறட்சி லட்சிய உலகம்!

அவள் நடந்து நடந்து சோர்ந்து போகிறாள்.

"மாஜி!"

"என்ன சம்பா?"

"என் பெரிய பிள்ளையைப் பற்றி உங்களிடம் சொல்லியிருக்கிறேனில்லையா?"

"ஆமாம், கல்யாணம் கட்டி, பெண்சாதி ரெண்டு வருஷத்தில் செத்துப் போச்சு? வேற கட்டணும்னே."

"இப்பத்தான் ரிக்ஷா இழுக்கப் போகிறான்; சில நாளைக்குக் குடிச்சிடறான். பொறுப்பு வராத பையனுக்கு மறு கல்யாணம்

எதுக்குன்னேன்... அவன் இப்ப பாதி நாளும் வீட்டுக்கே வரதில்ல மாஜி!"

"குடித்து விடுகிறானா?"

"முன்னெல்லாம் மாஜி, வீட்டுக்குக் காசு ஏண்டா குடுக்கலேன்னா சண்டை போடுவான். இப்ப பொறுத்திரு, நமக்கெல்லாம் நல்ல காலம் பிறக்கப் புரட்சி வரப்போகிறதுன்னு என்னென்னவோ பேசறான். எங்க சந்துச் சுவரில் 'இன்குலாப்! ஸிந்தாபாத். ஏ முதலாளி நாயே, உன் தோலை உரித்து நாங்கள் செருப்பணிவோம்'ன்னெல்லாம் எழுதியிருக்கிறானாம். அதுல், நான் கூடப் படிக்கிறேங்கறான். எனக்குப் பயமாயிருக்கு மாஜி. அவன் தகப்பனிடம் சொல்லிக் கண்டிக்கச் சொல்லலாம்னா - தகப்பனிடமிருந்து கடிதாசி கூட இல்லை - பணமும் வரலே..."

"கவலைப்படாதே சம்பா, உன் கணவனுக்கு ஒரு கடிதம் எழுதிப் போடலாம். உன் பையன் எங்கே ரிக்ஷா வச்சிட்டிருக்கிறான்; கோர்ட்டுப் பக்கமா, பங்கிபூர் பக்கமா?"

"ஸ்டேஷன் பக்கம் மாஜி..."

"அவன் வீட்டுக்கு வரும் நேரத்தில் சுனிலிடம் சொல்லி அனுப்பு. அவனிடம் நான் வந்து பார்த்துப் பேசுறேன்."

"மாஜி கங்காராம்ஜி என்னென்னவோ சொல்லுகிறார்..."

"யார் கங்காராம்ஜி?"

"கரிக்கடைக்காரர்..."

"நீ அதெல்லாம் கேட்டுக் கவலைப்படாதே. உன் போன்ற தாயாருக்கு இனியும் கஷ்டங்கள் வருவதற்கில்லை. தெய்வம் துணை... ஆம், தெய்வம் துணையிருக்கிறது."

வெறி வந்தாற்போல் அந்தச் சொற்களே திரும்பத் திரும்ப வருகின்றன! சந்தில் வண்டிச் சத்தம் கேட்கிறது.

தொழிற்சாலை லாரி முக்கி முனகி மலை ஏறுவது நினைவுக்கு வர ஒலிச் சிதறல்கள்; பிளிறல்கள்...

சரக் சரக்கென்ற ஜோட்டொலிகள்.

துரையின் காலணிகள் இவ்வளவு வன்மையாக ஒலிப்பது வழக்கமில்லையே?

பதற்றத்துடன் அவள் வாயிலுக்கு வருகிறாள். வானில் மேகங்கள் குவிந்திருக்கின்றன; நிலவு தெரியவில்லை. அவள் வீட்டை நாடித்தான் வண்டி வந்து நிற்கிறது. ஸ்டேஷன் வாகனம் போல் தோன்றுகிறது.

இறங்கி வருபவர்கள் போலீஸோ?

இல்லை. சாதா உடை அணிந்தவர்கள்தாம்.

"...துரைராஜ் வீடு..."

"இதுதான்... நான் தான் அவருடைய மனைவி. என்ன சமாசாரம்...?

"துரைராஜுக்கு... விபத்தில் கொஞ்சம் காயம்பட்டிருக்கிறது... நீங்கள் ஆஸ்பத்திரிக்கு வருகிறீர்களா...?"

"விபத்தா? என்ன... என்ன விபத்து?"

"ஓ... ஸாரி. இங்கே விருந்து கூட்டத்தில் குண்டு விழுந்தது. விஷமம் யாருடையதென்று தெரியவில்லை. மூன்று பேருக்குக் காயம். உயிருக்கு ஆபத்தில்லை. நீங்கள் கவலைப்பட வேண்டாம்..."

பளாரென்று கன்னத்தில் அறை விழுந்ததும் புலன்கள் மழுங்கி கொய்யென்ற ரீங்காரம் செவிகள் கேட்கும் திறனின் கழுத்தைப் பிடித்து இறக்கி விட்டாற் போலிருக்கிறது. சொற்கள் உருவாகாமலே கரைந்து போகின்றன.

கதவைப் பூட்டுமுன் சம்பா கைகளைப் பிசைந்து கொண்டு உடல் நடுங்க மனம் பதற வெளியே நிற்கிறாள்.

"மாஜி!" என்ற குரல் பிசிறு தட்டினாற் போல ஒலிக்கிறது.

யமுனா தன் நெஞ்சைத் தொட்டுக் கொண்டு கண்ணீரை விழுங்கிக் கொள்கிறாள்.

"ஒண்ணும்மில்லே, போ. குழந்தைகள் தனியாக இருப்பார்கள். வீட்டுக்குப் போ!"

பாலைவனப் பொட்டலில் மூடுவண்டி இருட்டுக்குள் வைத்து அவளை எங்கோ கொண்டு செல்கிறது.

*****

Gowtham Web Services
Our Websites: www.chennailibrary.com, www.samaiyalarai.com, www.tamilthiraiulagam.com, www.inbasutrula.com, www.siruvarulagam.com, www.chennainetwork.com, www.kovainetwork.com, www.madurainetwork.com, www.trichynetwork.com, www.nellainetwork.com, www.salemnetwork.in, www.indiainfolibrary.com, www.wowcricket.com, www.gowthampathippagam.com